# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

CRICKET
AUSTRALIA

# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

இந்த உதவி வழிகாட்டியானது, PlayHQ-இல் பதிவுசெய்யும் செயல்முறைக்கான முழு விளக்கத்தையும் உள்ளடக்கியது. இந்த படிப்படியான வழிகாட்டியில் பின்வருபவை உள்ளடங்கியுள்ளன:

- PlayHQ கணக்கு ஒன்றை உருவாக்குதல்
- துடுப்பாட்ட அடையாளம் (Cricket ID) ஒன்றை உருவாக்குதல்/துடுப்பாட்ட அடையாளம் ஒன்றை இணைத்தல்
- ஒரு குழந்தையை / உங்களைச் சார்ந்திருப்பவரைப் பதிவுசெய்தல்





## கவனிக்கவேண்டிய முக்கியமான விடயங்கள் :


- **ஒரு 'Cricket ID' என்பதும் 'MyCricket ID' என்பதும் *ஒரே விடயம் அல்ல.* ஒரு விளையாட்டுவீரர் PlayHQ மூலம் முதன்முறையாகப் பதிவுசெய்யும்போது, அவர் தனது PlayHQ கணக்கை ஒரு Cricket ID-உடன் இணைக்க வேண்டும். Cricket ID என்பது, ஒரு நபரின் துடுப்பாட்டம் சம்பந்தமான எல்லா விடயங்களுக்குமான ஒரே கணக்கு ஆகும். உங்கள் அனைத்து முன்னுரிமைகளையும் நீங்கள் நிர்வகிக்கும் இடம் இதுவாகும், அத்துடன் ஒரு துடுப்பாட்ட வீரராக, உங்கள் தொழில்வாழ்க்கை சம்பந்தப்பட்ட எல்லா புள்ளிவிவரங்களையும் (MyCricket தளத்தில் உள்ளவை உட்பட) வைத்திருக்கும் கணக்கும் இதுவே ஆகும். உங்கள் Cricket ID மூலம், இந்த விளையாட்டில் உள்ள உங்களுடைய ஈடுபாட்டைப் பற்றிய கூடுதல் தகவல்களை நாங்கள் அறிந்துகொள்ளும்போது, உங்களுக்கென தனிப்பட்ட மற்றும் பொருத்தமான அனுபவங்களை உங்களுக்கு வழங்க இது எங்களை அனுமதிக்கும்.**
- ஒரு குழந்தையைப் பதிவுசெய்வதென்றால், முதலில் உங்கள் PlayHQ கணக்கை உருவாக்கவேண்டுமென்பதை தயவுசெய்து நினைவில் கொள்ளுங்கள். ஒரு குழந்தையைப் பதிவுசெய்யும்போது, உங்கள் Cricket ID-ஐ குழந்தையின் PlayHQ கணக்குடன் இணைப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

**பின்வரும் உதாரணமானது, Cricket Blast Holiday Program-க்கான பங்கேற்பாளர் பதிவுச் செயல்முறை ஆகும், இருப்பினும் சிறுவர் மற்றும் பெரியோருக்கான துடுப்பாட்டப் பதிவுகளுக்கான அறிவுறுத்தல்களும் இதே மாதிரியாகத்தான் இருக்கும்.**

# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

1. PlayCricket வலைத்தளம் ஊடாக, உங்கள் சங்கத்தை (club) கண்டறிந்து, பொருத்தமான விடயத்தின் கீழுள்ள ‘**Register**’ (பதிவுசெய்க) என்ற பொத்தானைச் சொடுக்கவும்.




கிளப் கிரிக்கெட் (Club Cricket) உதாரணம்


PlayCricket வலைத்தளம் ஊடாக, உங்களுக்கு வேண்டிய விடயத்திற்கு '**Register**' என்பதை அழுத்தியதும், நீங்கள் PlayHQ-க்கு திருப்பி அனுப்பப்படுவீர்கள்.




CRICKET AUSTRALIA

# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

PlayHQ பக்கத்தில் உங்களுக்கு வேண்டிய விடயத்தின் விவரங்களைச் சரிபார்த்தவுடன், ‘**Get started →’ (தொடங்குக) என்பதைச் சொடுக்கவும்.**





கிளப் கிரிக்கெட் (Club Cricket) உதாரணம்




நிகழ்ச்சிக்குப் பதிவுசெய்வதற்கான உதாரணம்

# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

2. **உங்களிடம் ஏற்கனவே ஒரு PlayHQ கணக்கு இருந்தால், படிமுறை 5-க்குச் செல்லவும்**. உங்களிடம் கணக்கு ஒன்று இதுவரை இல்லையென்றால், **'ஒரு கணக்கை உருவாக்குக (Create an account)'** என்பதைச் சொடுக்கவும்.





நீங்கள் ஒரு குழந்தையைத்தான் பதிவுசெய்கிறீர்கள் என்றாலும், கேட்கப்படும் உங்கள் சொந்த விவரங்களை வழங்கி PlayHQ கணக்கு ஒன்றை உருவாக்கவும். அதன்பின்னர், உங்கள் PlayHQ கணக்கின் கீழ், உங்கள் குடும்ப உறுப்பினர்களை அல்லது உங்களைச் சார்ந்திருப்பவர்களை நீங்கள் பதிவுசெய்யலாம்.



# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி


3. புதிய கணக்கு ஒன்றை உருவாக்குகிறீர்கள் என்றால், தேவையான விவரங்களைப் பூர்த்திசெய்து, '**Sign up**' என்பதை அழுத்தவும்.



# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

4. PlayHQ-இல் புதிதாகப் பதிவுசெய்பவர்களின் மின்னஞ்சலுக்கு ஒரு சரிபார்ப்புக் குறியீடு (verification code) அனுப்பப்படும். உங்கள் மின்னஞ்சல் அகப்பெட்டி (inbox) ஊடாக நீங்கள் சரிபார்ப்புக் குறியீட்டைப் பெற்று, PlayHQ தளத்தில் அந்தக் குறியீட்டை உறுதிப்படுத்த வேண்டியிருக்கும் (சரிபார்ப்புக் குறியீட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், உங்கள் மின்னஞ்சலில் உள்ள 'junk mail'-க்குச் சென்று பார்க்கவும்).

அதை உள்ளிட்ட பின், '**Confirm code**' என்பதை அழுத்தவும்.



Dear Justin,

Please verify your email address using the code below.


**Your verification code is: 026399**

Please copy the link below and paste it into the address bar of your browser to verify your account.

https://www.uat.playhq.com/signup/verify?registrationCode=dd1ab8


Please do not reply to this email as the inbox is not monitored. Please visit support.playhq.com for further assistance.

Regards,
**PlayHQ Team**




# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

5. இப்போது, உங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல்லைப் (password) பயன்படுத்தி, உங்கள் PlayHQ கணக்கினுள் நுழையவும்.




# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

6. இந்தக் கட்டத்தில், நீங்கள் யாரைப் பதிவு செய்கிறீர்கள் என்பதை நீங்கள் தெரிவுசெய்ய வேண்டும்.
**விருப்பத்தெரிவு 1** – என்னை நானே பதிவுசெய்கிறேன்
**விருப்பத்தெரிவு 2** – ஒரு புதிய குடும்ப உறுப்பினர் அல்லது என்னைச் சார்ந்திருப்பவரைப் பதிவு செய்கிறேன்





7. பங்கேற்பாளர் பதிவுசெய்யும் பாத்திரத்தை (role) தேர்ந்தெடுக்கவும். இந்த உதாரணத்தில், நாம் ஒரு குழந்தையை/சார்ந்திருப்பவரை 'Player' (விளையாட்டுவீரர்) என பதிவுசெய்கிறோம்.

பயிற்சியாளர்கள் மற்றும் குழு மேலாளர்களும்கூட ஒவ்வொரு விளையாட்டுக் காலத்திலும் PlayHQ மூலம் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்வது முக்கியமாகும். இந்தப் பாத்திரங்கள் (roles), பொருத்தமாக இருப்பின், பதிவுப் படிவத்தின் இந்தப் பிரிவில் தோன்றும்.




நிகழ்ச்சிப் பதிவு





கிளப் கிரிக்கெட் (Club Cricket) பதிவு

CRICKET AUSTRALIA

# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

8. பங்கேற்பாளரின் அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்யவும்





பங்கேற்பாளரின் அனைத்து விவரங்களையும் நீங்கள் பூர்த்தி செய்தவுடன், '**Save and Continue →**' என்பதை அழுத்தவும்.



# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

9. 'Fees' (கட்டணங்கள்) என்ற பிரிவின் கீழுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டதை உறுதிசெய்த பின், '**Continue →**' என்பதைச் சொடுக்கவும்.







CRICKET AUSTRALIA

# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி


10. அடுத்து, **உங்கள் Cricket ID-ஐ உங்கள் PlayHQ கணக்குடன் இணைக்க வேண்டும்**. பயிற்சி வழங்குவதற்கான அல்லது நடுவராக இருப்பதற்கான ஏதேனும் படிப்புகளை நீங்கள் இணையவழியாக மேற்கொண்டிருந்தால், அல்லது MyCricket செயலியைப் பயன்படுத்தியிருந்தால் இதற்குமுன்னர் நீங்கள் ஒரு Cricket ID-ஐ உருவாக்கியிருக்கக்கூடும்.

***ஒரு 'Cricket ID' என்பது 'MyCricket ID' இல்லை என்பதைத் தயவுசெய்து நினைவில் கொள்ளவும்.***

தொடங்குவதற்கு, ‘Link Cricket ID’ என்ற பொத்தானைச் சொடுக்கவும்.




**தயவுசெய்து கவனிக்கவும்:**
ஆகஸ்ட் '22-க்கு முந்தைய பதிவுகளுக்கு, இந்தத் திரையின் தள அமைப்பு சற்று வித்தியாசமாகத் தோன்றலாம்.




# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

பின்னர், நீங்கள் Cricket ID பக்கத்திற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள் - உங்களிடம் ஏற்கனவே ஒரு Cricket ID இருந்தால், உங்கள் மின்னஞ்சல் மற்றும் கடவுச்சொல்லைப் (password) பயன்படுத்தி உள்நுழையவும். இல்லை என்றால், 'Sign Up' என்பதை அழுத்தவும்.


உங்களிடம் தற்போது ஒரு Cricket ID உள்ளதா என உறுதியாகத் தெரியவில்லை என்றால், ‘forgot password' (கடவுச்சொல்லை மறந்துவிட்டேன்) என்ற இணைப்பைச் சொடுக்கி, உங்கள் Cricket ID-ஆக இருக்கலாம் என நீங்கள் நம்பும் மின்னஞ்சல் முகவரியை உள்ளிடவும். இந்த மின்னஞ்சல் முகவரியை வலைத்தளம் ஏற்றுக்கொண்டால், தொடர்ந்து புதிய கடவுச்சொல் ஒன்றை உருவாக்கி, புதிதாக உருவாக்கப்பட்ட கடவுச்சொல்லைக் கொண்டு உங்கள் Cricket ID-இனுள் நுழையவும்.

***- வலைத்தளப் பக்கம் வெறுமையாக இருந்தால், வேறு உலாவியை (browser) பயன்படுத்த முயற்சிக்கவும் (அதாவது Microsoft Edge).***




# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

நீங்கள் '**Sign up**' என்பதை அழுத்தியிருந்தால், அனைத்து விவரங்களையும் பூர்த்திசெய்த பின்னர், '**Create Cricket ID**' என்பதை அழுத்தவும்.





CRICKET AUSTRALIA

# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி




11. **<u>Cricket ID ஒன்றை இப்போதுதான் புதிதாக உருவாக்கியவர்களின் மின்னஞ்சலுக்கு</u>**, சரிபார்ப்புக் குறியீடு (verification code) ஒன்று அனுப்பப்படும். உங்கள் மின்னஞ்சல் அகப்பெட்டி (inbox) ஊடாக அந்த சரிபார்ப்புக் குறியீட்டைப் பெற்று, Cricket ID வலைத்தளப்பக்கத்தில் குறியீட்டை உறுதிப்படுத்தவும் (சரிபார்ப்புக் குறியீட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், 'junk mail'-க்குச் சென்று பார்க்கவும்).


குறியீட்டை உள்ளிட்ட பின், '**<u>Continue</u>**' என்பதை அழுத்தவும்.



# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

12. நீங்கள் அதன்பின் மீண்டும் PlayHQ தளத்திற்கு திருப்பி அனுப்பப்படுவீர்கள். உங்கள் Cricket ID 'Linked' (இணைக்கப்பட்டுள்ளது) என்பதை நீங்கள் காண்பீர்கள் - '<u>Continue →</u>' என்பதை அழுத்தவும்.

**தயவுசெய்து கவனிக்கவும்:**
ஆகஸ்ட் '22-க்கு பின்னரான பதிவுகளுக்கு, இந்தத் திரையின் தள அமைப்பு சற்று வித்தியாசமாகத் தோன்றலாம்.



# PLAYHQ-இல் பதிவுசெய்வது எப்படி

13. இறுதியாக, உங்கள் கட்டண விவரங்களைப் பூர்த்தி செய்து, '<u>**Confirm purchase**</u>' (வாங்குவதை உறுதிப்படுத்துக) என்பதை அழுத்தவும்.

